

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2054 பிப்ரவரி 16, 2023 புரட்சி 22 முழக்கம் 05 விலை: ரூ.3.00

# பா.ஜ.க. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விரிக்கும் சூழ்ச்சி வலை

*‘இந்துத்துவா’ அரசியல் வரும் தேர்தலில் எடுபடாது என்ற முடிவுக்கு வந்த பா.ஜ.க.வும், ஆர்.எஸ்.எஸ்.சும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சூழ்ச்சி வலை வீசி வாக்குகளாக மாற்றும் திட்டத்தை உருவாக்கி வருகிறது.*

சர்வதேச காதலர் தினமான பிப்ரவரி 14-யை ஒன்றிய அரசின் விலங்குகள் நல வாரியம் பசு மாடு அணைப்பு தினமாக கடை பிடிக்கு மாறு விடுத்த வேண்டுகோளை இப்போது திடீரென்று ரத்து செய்வதாக அறிவித்துள்ளது. இதற்கு மக்களுடைய எதிர்ப்பு தான் காரணம் என்றாலும்கூட இதற்கு முன்பு எப்போதும் பிடிவாதமாக இருக்கிற ஒன்றிய பாஜக ஆட்சி இப்போது திடீரென்று தன்னுடைய குரலை ஏன் மாற்றிக் கொண்டு இருக்கிறது, இதற்குப் பின்னால் ஒரு மிகப் பெரிய அரசியல் சூழ்ச்சி அடங்கி இருப்பதை நாம் கவனத்தில் கொண்டாக வேண்டும்.

பிப்ரவரி 10 ஆம் தேதி டைம்ஸ் ஆப் இந்தியா நாளேடு ஒரு முக்கிய செய்தியை வெளியிட்டிருக்கிறது, 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் “இந்துத்துவ முழக்கம்” தங்களை கரை சேர்க்காது என்ற முடிவுக்கு பாரதிய ஜனதா கட்சி அனேகமாக வந்துவிட்டது, இதற்காக ஆர்எஸ்எஸ் தலைமையிடம் கருத்துகளைக் கேட்டு வருகிறது. ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் ஜாதி அமைப்புகளை தற்போது எதிர்க்கத் தொடங்கியிருக்கிறார், ஜாதி அமைப்பிற்குக் காரணம் பிரிட்டிஷ்காரர்கள் தான் என்ற கருத்தை இதுவரை பேசி வந்த



Bhagwat's pandit-bashing comes as BJP seeks broader base in Maha and beyond

Ambarish Mishra
@timesgroup.com

Mumbai: RSS chief Mohan Bhagwat's recent criticism of the caste system and the role played by "pandits" in perpetuating it has sparked a debate on whether the Sangh Parivar's effort to reach out to the backward classes and Muslim-dalit segments has anything to do with it.

The BJP is trying to forge a broad caste alliance ahead of the 2024 elections. Its central leadership has over months been in consultation with Bhagwat and other Sangh bigwigs on the issue, sources in the state BJP said on Friday.

There is a growing perception in the party that extensive social engineering could be a viable alternative to Hindutva. The Congress could rule the country for six decades because it painstakingly mobilised the BC-OBCs and the dalit-Muslim constituency, goes the argument. However, sceptics in the BJP said a rainbow alliance of the weaker sections, including Muslims, could be a daunting task in view of the vituperative rhetoric by a section within. A sizeable chunk of Mumbai Muslims may back the Uddhav Thackeray-led Sena faction in the BMC elections, they said.

Political analyst Prakash Bal said, "Bhagwat has changed his tune. Five years ago, he was blaming foreign invaders for heaping the caste baggage on India. The latest change is an indication that the BJP is worried that the Hindutva card will not help them sail through the next election. However, dalit-Muslims will not toe the BJP line lock, stock and barrel."

Countered a state BJP politician, "The BJP did exceedingly well in the Uttar Pradesh assembly elections last year as it zeroed in on the kevat and nishad communities — the 'ati pichchada' and the pasmanda Muslims. The Centre has been closely monitoring a slew of welfare schemes for pasmanda Muslims."

ஆர்.எஸ்.எஸ் இப்போது தன்னுடைய குரலை மாற்றிக் கொண்டு பண்டிட்கள் என்ற பார்ப்பனர்கள் தான் ஜாதி அமைப்பைக் கட்டி காத்து வருகின்றார்கள் என்று வெளிப் படையாகவே மோகன் பகவத் பேசியிருக்கிறார்.

இந்த மாற்றத்திற்குப் பின்னால் உள்ள காரணங்கள் என்ன என்பதையும் ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு கூறியிருக்கிறது.

இந்துத்துவத்திற்கு மாற்றாக தலித் பிற்படுத்தப்பட்ட, இஸ்லாமிய மக்களை ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து, தங்களது ஆதரவு சக்தியாக மாற்றி அதனை வாக்கு வங்கியாக மாற்றுவதன் மூலம் தான் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் கரை சேர முடியும் என்ற முடிவுக்கு பாஜகவும் வந்துவிட்டது, ஆர்.எஸ்.எஸூம் இதே கருத்தைத் தான் இப்போது வலியுறுத்திக் கொண்டிருக்கிறது.

இந்த சூழ்ச்சியின் அடிப்படையில் தான் ஒடுக்கப்பட்ட மக்களை ஏமாற்றுவதற்கான கருத்துகளை இப்போது அவர்கள் பார்ப்பனர் எதிர்ப்பு, ஜாதி எதிர்ப்பு, இஸ்லாமிய ஆதரவு என்ற முகமூடிகளோடு வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை ஒடுக்கப்பட்ட மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

உத்திரபிரதேசத்தில் இதே தந்திரம் தான் எங்களுக்குப் பயன் அளித்தது என்று கூறும் பாஜகவினர், அங்கே கடந்த தேர்தலில் பாஜக வெற்றி பெற்றதற்கான காரணம் தலித் மக்களில் குறிப்பிட்ட பிரிவுகளை (கேவத் மற்றும் நிஷாத்) தங்களின் ஆதரவு சக்திகளாக மாற்றியதும் பஸ்மந்தா முஸ்லிம்களை தங்களது ஆதரவு சக்திகளாக மாற்றியதும் தான் காரணம் என்று கூறுவதாக ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு செய்தி வெளியிட்டு இருக்கிறது.

இதன் வெளிப்பாடே இதுவரை சனாதனப் பெருமை பேசிய ஆளுநர் ரவி, இப்போது தமிழ்நாட்டில் தலித்துகள் உரிமை பற்றி குரலை மாற்றிப் பேசத் தொடங்கியிருக்கிறார். அதேபோல் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக மோடி செயல்படுவதாக ஒரு நாடகம் அரங்கேற்றப்படுகிறது. ஒன்றிய இணை அமைச்சர் முருகன், யாழ்ப்பாணம் சென்றதும் அவருடன் ஒட்டிக் கொண்டு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையும் உடன் சென்றதையும் இத்துடன் இணைத்துப் பார்க்க வேண்டும்.

ஆக ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், இஸ்லாமிய மக்களுக்கும் பார்ப்பனியம் விரிக்கின்ற சூழ்ச்சி வலையில் ஏமாறாமல் ஒடுக்கப்பட்ட மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டியது மிக முக்கியம் என்பதை எச்சரிக்கையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## மதுரையில் காதலர் தினம் ‘இந்து முன்னணி’க்கு கழகம் பதிலடி



காதலர் தினத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து மதுரை ராஜாஜி பூங்காவில் இந்து முன்னணி அமைப்பினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

செய்தியறிந்து, அதே பூங்காவில் மதுரை திவிக சார்பில் காதலர் தின வாழ்த்து தெரிவித்து காதலர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது..

மேலும் “ஜாதி மறுத்து காதல் செய்வோம் - ஜாதி மறுத்து இணையேற்போம்” - ஜாதி மறுப்பு இணையர்களின் குழந்தைகளுக்கு “ஜாதியற்றோர் இட ஒதுக்கீடு வழங்கிடுக” என்று தொடர் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

மாவட்ட செயலாளர் மா.பா. மணிஅமுதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டி, புலிப்பட்டி கருப்பையா மற்றும் விடுதலை சிறுத்தைகள், ஆதித்தமிழர் பேரவைத் தோழர்கள் பங்கேற்றனர்.

## வினா விடை

- *செவ்வாய்கிரகத்தில் ஆறுகள் இருந்திருக்கின்றன.* **– நாசா**

  *அப்படி வாங்க வழிக்கு. அதுல ஒன்னுதான் எங்க வேதத்தில் கூறப்படும் சரஸ்வதி ஆறு. செவ்வாய்கிரகத்திலேயே எங்களாவதான் பூர்விகக் குடிகள், புரியுதோ!*

- *3 ஆளுநர்களைத் தந்து தமிழர்களுக்கு பெருமை சேர்த்திருக்கிறார், பிரதமர் மோடி.* **– பா.ஜ.க.**

  *என்ன குரல் மாறுது? மூன்று சனாதன ‘இந்துக்களைத் தந்து’ என்று தானே சொல்லணும். இப்போ, மதம் போய் – தமிழன் வந்துட்டானா?*

- **இந்து***மாக் கடல் – சீனாவின் பிடியில் சிக்கும் அபாயம் இருக்கும் நிலையில் பிரபாகரன் வெளிப்படுவதற்கான சூழல் உருவாகியுள்ளது.* **– பழ. நெடுமாறன்**

  **இந்தியப்** *பெருங்கடல்* **இந்து***மாக் கடலாக மாறி விட்டதா, அய்யா!*

- *பா.ஜ.கவின் கனவைத் தவிர்க்க பிரபாகரன் மீண்டும் ஈழத்துக்கு வரவேண்டும்!* **– கோவை இராமகிருட்டிணன் அறிக்கை**

  *அப்ப, தமிழ் ஈழத்துக்காக வரவேண்டாமா? அப்படியே ஈரோடு இடைத்தேர்தலுக்கும் வந்து பா.ஜ.க.வின் கனவைத் தவிர்த்தால் நல்லது.*

- *வருமான வரித் துறையில் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்றுப் பேசினார்.* **– செய்தி**

  *அவர் பேசுவார். பசுமைத் தீர்ப்பாயத்தில் 5 கோடி அபராதம் கட்டியவர். அங்கு போயும் பசுமையைக் காப்பாற்றும் வழிமுறைகளை விளக்குவார்.*

தலையங்கம்

## ஆளுநரே! பதில் கூறுங்கள்!

சனாதனப் பெருமை பேசி வந்த தமிழக ஆளுநர் ரவி இப்போது திடீரென்று தமிழ்நாட்டில் தலித் மக்கள் உரிமைகளுக்காக கண்ணீர் வடிக்கத் தொடங்கியிருக்கிறார். இது தான் 'திராவிட மாடல் ஆட்சியா?' என்று மேடைப் பேச்சாளர் போல் நக்கலடித்தும் இருக்கிறார். ஆளுநர் ரவி புரோகித - வைதீக வட்டாரங்களிலும் ஆகமக் கோயில்கள் சடங்குகளிலும் பங்கேற்கும் சனாதனவாதியாகவே செயல்பட்டு வரும் நிலையில் இந்த மாற்றத்துக்கு என்ன காரணம் என்ற கேள்வி எழுந்து நிற்கிறது. ஆளுநர் முதலில் சில அடிப்படையான கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டும்.

1. ஆளுநர் பேசும் சனாதனம் என்ற 'வர்ணாஸ்ரமம்' தான் ஜாதிக்கும் தீண்டாமைக்கும் ஆணிவேர் என்பதை ஆளுநர் மறுக்க முடியுமா? சனாதனத்தைப் போற்றிக் கொண்டு தீண்டாமைக்கு எதிராகப் பேசுவது இரட்டை வேடமல்லவா?

2. இந்து மதம் - இந்து தர்மம் என்பவை இந்தியா தோன்றுவதற்கு முன்பே வந்து விட்டது என்று பேசிய ஆளுநர் அவர்களே! அதே 'இந்து தர்மம்' தானே மனிதர்களுக்குள் ஜாதியையும் தீண்டாமையையும் திணித்து வைத்திருக்கிறது. தலித் மீது வன்கொடுமை நடத்துவது யார்? அவர் ஒரு சனாதன இந்து; ஒவ்வொரு நாளும் அடக்குமுறைகளைச் சந்திக்கும் 'தலித்'துகள் யார்? அவர்களும் உங்கள் பார்வையில் 'இந்து'; இந்துவே இந்து மீது வன்கொடுமை நடத்துவதை நீங்கள் ஏன் கண்டிக்கவில்லை? ஏன், ஒடி பதுங்குகிறீர்கள்?

3. குடிநீர்த் தொட்டியில் மலத்தைக் கொட்டிய காட்டுமிராண்டி ஜாதி வெறியர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் முயற்சிகளில் தமிழக அரசு சி.பி.சி.அய்.டி. விசாரணை வழியாக தீவிரமாகக் களமிறங்கியிருக்கிறது. அதற்காக நீங்கள் குரல் கொடுப்பதும் நியாயம் தான். ஆனால், மலம் எடுப்பதற்காகவே ஒரு ஜாதியை உருவாக்கியது நீங்கள் பேசும் சனாதன இந்து தர்மம் தானே? அது மாறாதது - நிலையானது என்று பெருமை பேசுவதும் நீங்கள் தானே? மலம் எடுப்பவர்கள் தெய்வத்துக்கு ஈடான தொண்டினை செய்கிறவர்கள் என்று அதைப் புனிதப்படுத்திப் பேசியவர் நீங்கள் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடும் மோடி என்பதை மறுக்க முடியுமா?

4. 'திராவிட மாடல் ஆட்சி' என்று ஆளுநர் கிண்டலடிக்கும் தமிழ் நாட்டில் தான் வறுமைக்கோட்டின் கீழே வாழும் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களின் எண்ணிக்கை 9 சதவீதம். ஏனைய திராவிட மாடல் அல்லாத ஆட்சி நடக்கும் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழும் தலித் பழங்குடி மக்களின் சராசரி 74 சதவீதம் இதை உங்களால் மறுக்க முடியுமா?

5. பல்லாயிரம் ஆண்டுகளாக பார்ப்பனிய பாசிசமான வர்ணாஸ்ரமக் கொடுமைகளைச் சுமந்து சீரழிந்த மக்களின் விடுதலைக்கும் உரிமைக்கும் பார்ப்பனரல்லாத திராவிட இயக்கம் முன்னெடுத்த போராட்டங்கள் நிறைவேற்றிய திட்டங்கள் மற்றும் அமுலாக்கிய கல்விப் புரட்சியால் தான் இந்த சாதனை நடந்தது என்பதை ஆளுநரால் மறுக்க முடியுமா?

6. தலித் பட்டியலினப் பிரிவுகள் தங்கள் மீது ஜாதி ஆதிக்கம் செலுத்தத் துடிக்கும் பிரிவினரிடமிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு அவர்கள் சுதந்திரமாக செயல்படக் கூடிய உரிமை திராவிட ஆட்சியில்தான் நடக்கிறது என்பதும், அதற்காக இந்த ஆட்சி உருவாக்கிய உணவுப் பாதுகாப்பு உரிமை, இடஒதுக்கீடு சட்டங்கள் பாதுகாப்பு அரணாக இருக்கிறது என்பதையும் உங்களால் மறுக்க முடியுமா?

7. வன்கொடுமைகளை இயல்பான வாழ்க்கையாக சகித்துக் கொண்டு வாழப் பயிற்றுவிக்கப்பட்ட மக்களாக உங்களின் 'வடநாட்டு இந்தி இந்துத்துவா புண்ணிய'ப் பகுதிகள் இருக்கும்போது அதை ஏற்க மாட்டோம் என்று ஒவ்வொரு நாளும் போராட்டக் களத்துக்கு வரும் சூழ்நிலை 'தலித்' பழங்குடி மக்களுக்கு திராவிட மண்ணில் மட்டுமே இருக்கிறது என்பது எதைக் காட்டுகிறது?

8. சங்கரமடங்களிலும் உச்சநீதிமன்றத்திலும் பிரதமர் அலுவலகத்திலும் வெளிநாட்டு இந்திய தூதரகங்களிலும் நாட்டின் பொருளாதாரக் கொள்கையை நிர்ணயிக்கக் கூடிய ரிசர்வ் வங்கி உள்ளிட்ட நிதி நிறுவனங்களிலும், அய்.அய்.டி., அய்.அய்.எம். போன்ற உயர்கல்வியிலும் அங்கு பணியாற்றும் பேராசிரியர்களிலும் தலித் புறக்கணிப்பும் தீண்டாமையும் நிலவுவது ஆளுநருக்கு தெரியாதா?

9. கோயில் கர்ப்பகிரகத்தில் நுழைந்து வழிபாடு செய்வதிலும், கும்பாபி ஷேகம் நடத்துவதிலும், ஆளுநருக்கு ஆசி வழங்கும் புரோகிதர்களிலும் 'தீண்டாமை' நிலவுவதையும் மறுக்க முடியுமா? தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த இடங்களை எட்டிப் பிடிப்பதை கற்பனை செய்துகூட பார்க்க முடியுமா? இவற்றை யெல்லாம் ஆளுநர் கண்டிப்பாரா?

இப்படி கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆளுநர் பா.ஜ.க.வின் மேடைப் பேச்சாளராக மாறுவது அவரது கருத்துரிமை என்று வாதாடும் அவரது வழக்கறிஞர்களுக்கு ஒரு கேள்வி. அரசியல் சட்டத்தின் மாநில தலைமையாகக் கருதப்படும் ஆளுநர், இந்தக் கருத்துகளை யாரிடம் முறையிடுகிறார்? அவர் பேச வேண்டிய அரசிடம் தானே தவிர, பொது நிகழ்ச்சிகளிலா?

"பிராமணர்கள் பிரம்மயக்ஞம் செய்து பாவங்களைப் போக்கிக் கொள்ள முடியும்; நாடார்களாகிய நீங்கள் எந்தப் பாவத்தையும் செய்ய உரிமை உண்டு. பிராமணர்களுக்கு அமாவாசை நாளில் தட்சணைக் கொடுத்தால் போதும்; அந்த உரிமை உங்களுக்கு உண்டு. ஆனால் பிரம்மயக்ஞம் செய்து பாவங்களைப் போக்கிக் கொள்ளும் உரிமை (சூத்திரர்களாகிய) நாடார்களுக்கு இல்லை. எங்களுக்கு மட்டுமே உண்டு" என்று கோவை 'பிராமண சங்கக் கூட்டத்தில் திருச்சி கல்யாணராமன் பேசிய வீடியோ, வைரலாகிக் கொண்டிருக்கிறது. இந்தத் தீண்டாமை வெறிக்கு எதிராக ஆளுநர் பொங்கி எழுவாரா?

# 1954இல் ஆச்சாரியார் கொண்டு வந்த "இல்லம் தேடிக் கல்வி"

கொரோனா காலத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி இழப்பை சரி செய்வதற்காக தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட ஒரு புதுமையான திட்டம் தான் இல்லம் தேடி கல்வித் திட்டம்.

கடந்த ஓராண்டு காலமாக இத்திட்டம் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது என்று மாநில திட்டக் குழுவின் மதிப்பீட்டு அறிக்கை கூறுகிறது, இந்த மதிப்பீட்டு அறிக்கையை மாநில திட்ட குழுவின் துணைத் தலைவர் ஜெயரஞ்சன் அவர்கள் தமிழ்நாடு முதல்வர் அவர்களிடம் அளித்திருக்கிறார். அதில் இத்திட்டம் பற்றி ஆய்வுகள் செய்யப்பட்டு இருக்கின்றன.

6 மாவட்டங்களில் 362 பள்ளிகள், 679 தன்னார்வலர்கள், 362 தலைமையாசிரியர்கள், 362 ஆசிரியர்கள், 724 பெற்றோர்களிடம் கருத்துகள் கேட்கப்பட்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு இருக்கிறது.

அந்த அறிக்கையில் கூறியிருக்கிற சில முக்கிய பரிந்துரைகள் இல்லம் தேடி கல்வித் திட்டத்தின் எளிய கற்றல் முறைகள் மாணவர்களுடன் வலிமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை குறிப்பிட்டிருக்கிறது. இல்லம் தேடி கல்வித் திட்டத்தை தொடர வேண்டும் என்று வலியுறுத்துகிற இந்த அறிக்கை மாணவர்களின் கற்றல் இழப்பை சரி செய்வதற்கான பாலமாக செயல்பட்டு இருக்கிறது என்று கூறியிருப்பதோடு முக்கியமான ஒரு கருத்தை முன் வைத்திருக்கிறது. இதை ஒரு சமூக இயக்கமாக மாற்ற வேண்டும் என்பதுதான் அந்த அறிக்கை இல்லம் தேடி கல்வித் திட்டத்தை ஒரு சமூகமாக இயக்கமாக மாற்ற வேண்டும் என்று சொன்னால் அதை கல்வியை ஒரு பண்பாடு நிகழ்வாக வாழ்வியல் நிகழ்வாக மாற்றி மக்கள் பண்பாடு வாழ்வியலோடு கல்வியை இணைக்க வேண்டும், அதற்காக பாட நூல்களை உருவாக்க வேண்டும். பாடநூல்களில் நமது நாட்டில் கல்விக்காகப் போராடிய தலைவர்களின் வரலாறு ஜாதி எதற்கு தமிழர்களின் கொள்கைக்கு எதிரானது என்ற கொள்கைகள் மதத்திற்கு மாறாக மனிதத்தை உயர்த்தி பிடிப்பது சமூகநீதியை நாம் எப்படி போராடிப் பெற்றோம் என்று வரலாறுகளைக் கூறுவது இவைகள் எல்லாம் கட்டாயம் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தவாதிகள் தங்களுடைய மாநிலங்களில் வலதுசாரி கருத்துக்களை இந்த ராஷ்டிர கருத்துக்களை பாடத்திட்டங்களில் சேர்த்துக் கொண்டிருக்கிற போது கல்வி வளர்ச்சிக்கு இந்தியாவிற்கே வழிகாட்ட கூடிய நம்முடைய தமிழ்நாடு பாடத்திட்டங்களில் இதை சேர்ப்பதன் மூலமாகத்தான் இதை சமூக இயக்கமாக மாற்றுவதற்கான ஒரு அடித்தளத்தை நாம் உருவாக்க முடியும்.

சரஸ்வதி பூஜையை நாம் கொண்டாடிக் கொண்டிருந் தோம் காலம் முழுவதும்; ஆனால் கைநாட்டுப் பேர்வழி களைத் தான் தயார் செய்து வைத்திருந்தோம். சரஸ்வதி பூஜைக்கு மாற்றாக சமத்துவ கல்வி விழாக்களை நாம் அறிமுகப்படுத்த வேண்டும். அதற்கான விழாக்கள் போட்டிகள் பண்பாடுகள் இவைகளை நிகழ்த்தி நம்முடைய பண்பாடு என்பதே சமூக நீதி, கல்வி பண்பாடு. அதுவே தமிழர்களின் சுயமரியாதைக்கான அடையாளம் என்ற கருத்தை நோக்கி தமிழ் சமூகத்தை வளர்த்தெடுப்பது என்பதுதான் இதை சமூக இயக்கமாக மாற்ற வேண்டும் என்பதற்கான அடித்தளமாக அமையும் என்பதே.

1953ஆம் ஆண்டும் இதே போல் இல்லம் தேடி கல்வி ஒன்று வந்தது, அது ராஜகோபாலாச்சாரியார் கொண்டு வந்த இல்லம் தேடிய கல்வி. அந்தக் கல்வி என்ன சொன்னது என்று சொன்னால் தொடக்கப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் அரை நேரம் பள்ளியில் படித்துவிட்டு அரைநேரம் இல்லத் திற்கு சென்று அவரவர் அப்பன் செய்யும் குலத்தொழிலை செய்ய வேண்டும் என்று கூறியது, அதை காமராசர் தகர்த் தெறித்து அனைவருக்கும் ஆன கல்விக்கு அடித்தளமிட்டார்.

திராவிட இயக்கம் கல்வியை மேலும் மேலும் வளர்த்தெடுத்து இந்தியாவிற்கே வழிகாட்டக்கூடிய ஒரு மாநிலமாக தமிழ் நாட்டை வளர்த்திருக்கிறது. ஆச்சாரியார் கொண்டு வந்த இல்லம் தேடி கல்விக்கு நேர் முரணாக அனைவருக்கும் கல்வி என்ற இல்லம் தேடிக் கல்வித் திட்டம் இப்போது அறிமுகப்படுத்தி இருக்கிறது. கல்வி என்பதுதான் ஒரு சமூகத்தின் சுயமரியாதையை, சமூகத்தின் விளிம்பு நிலை மக்களின் அதிகாரத்தை, சமூகத்தின் விளிம்பு நிலை மக்களின் சமத்துவத்தை, பெண்ணுரிமையை உறுதிப்படுத்துகிற ஒரு அடிப்படையான கண்ணோட்டம் அதை நோக்கி நாம் நகர்வோம் அதற்கான திட்டக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று அரசு இத்திட்டத்தை தொடர வேண்டும்.

# சென்னைக் கூட்டத்தில் பால். பிரபாகரன் உரை

# காந்தியார் கொலை: பெரியார் முன்கூட்டியே எச்சரித்தார்

*பிப்.6, 2023 அன்று மயிலைப் பகுதியில் கழகம் நடத்திய காந்தி படுகொலைக் கண்டன நாள் பொதுக் கூட்டத்தில் கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் நிகழ்த்திய உரை.*

இப்போது எதற்காக திராவிடர் விடுதலைக் கழகம், காந்தியார் படுகொலை நாள் கூட்டத்தை நடத்துகிறது என்று சொன்னால், இப்போது ஆண்டு கொண்டிருக்கிற ஒன்றிய அரசாங்கம், பல்வேறு வரலாற்றுத் திரிபுவாதங்களை செய்து கொண்டிருக்கிறது. குஜராத்தினுடைய பாடப் புத்தகங்களிலே மத்திய அரசினுடைய பாடப் புத்தகங்களிலே 1948ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் தேதி காந்தியடிகள் இறந்து போனார் என்று எழுதி வைத்திருக்கிறார்கள். ஏதோ நோய் வாய்ப்பட்டு இறந்தது மாதிரியோ அவர் ஆஸ்பத்திரியில் இருந்து பிழைக்க மாட்டார் என்று சொல்லி அவர் செத்துப் போனது மாதிரியும் பாடப் புத்தகத்தில் எழுதி வைத்திருக்கிறார்கள்.

இன்னும் நான்கைந்து ஆண்டுகள் கழித்துப் பார்த்தால் காந்தி, 1948ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் தேதி இறந்து போனார் என்று முடித்து விடுவார்கள். ஆனால் அவர் இறந்து போனதன் சூட்சுமம் என்ன என்பதை மக்கள் மத்தியிலே எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமும் கடமையும் பொறுப்பும் பெரியாரியவாதிகளுக்கு இருக்கிறது என்கிற அடிப்படையிலே தான் இந்த பொதுக் கூட்டத்தை நாம் நடத்துகிறோம்.

இங்கு இருக்கின்ற பழங்குடியின மக்களை, ஆதிவாசிகள் என்று நாம் அழைக்கிறோமே, அந்த ஆதிவாசிகளை, பழங்குடியினரை இதற்கு முன்னால் வாஜ்பாய் அரசாங்கத்தில் முரளி மனோகர் ஜோஷி என்கிற ஒருவர் அமைச்சராக இருந்தார்; அவர் பழங்குடிகள் என்கிற இடத்தில் எல்லாம் பழங்குடிகள் என்பதைத் தூக்கிவிட்டு, மலைவாழ் மக்கள் என்று எழுதினார். அவர்கள் மலையில் வாழ்கிறார்கள். ஆகவே, அவர்கள் மலைவாழ் மக்கள் என்று சொன்னார். அப்போதுதான் பெரியாரியவாதிகள் நாங்கள் கேட்டோம். ஏன்டா, பழங்குடிகள் என்று சொன்னால் என்ன கேடு உனக்கு? பழங்குடிகள் என்று சொன்னால் இந்த நாட்டின் மண்ணின் மைந்தர்கள் அவர்கள் தான், இந்த மண்ணிற்குரியவர் என்று பொருள்படும். ஆனால் இவர்கள் என்ன நினைக்கிறார்கள்? இந்திய தேசியத்தை இந்த நாட்டை பார்ப்பனர்களுடைய நாடாக மாற்று வதற்காக முயற்சி செய்கிறார்கள். உலகத்திலே இரண்டு இனங்களுக்கு நாடு கிடையாது. ஒன்று யூதர் இனத்திற்கு நாடு கிடையாது, ஆனால் அங்கு இருக்கக்கூடிய மதத்தின் அடிப்படையில், யூதர்களும், அமெரிக்கா எல்லாம் சேர்ந்து, இஸ்ரேல் என்கிற, ஒரு நாட்டை, உருவாக்கிக் கொண்டனர். யூதர்களுக்கு ஒரு நாடு கிடைத்து விட்டது. ஆனால், உலகத்திலே, நாடு கிடைக்காத ஒரே இனமாக பார்ப்பனர் இனம் இருக்கிறது. அந்த பார்ப்பனர்கள் இந்தியாவை தங்களுடைய நாடாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக, வரலாற்றை ஆரம்பத்திலிருந்தே மாற்றி எழுதுகிறார்கள்.

காந்தியாரிடம் நமக்கு முரண் உண்டு. இந்த ஒரே ஒரு எடுத்துக்காட்டை, நான் சொல்ல விரும்புகிறேன். புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் இந்த நாட்டில் பெரும் பான்மையான உழைக்கும் மக்களாக இருக்கக் கூடிய பட்டியலின சமூக மக்களுக்கு இரட்டை வாக்குரிமை வேண்டும் என்கிற ஒரு மகத்தான ஒரு உரிமையை பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக் கொண்டு வருகிறார். அதை பெற்றுக் கொண்டு வருகிற போது இரட்டை வாக்குரிமை நமக்குக் கிடைத்தால், இந்துக்களுடைய ஒற்றுமை உடைந்து விடும் என்று காந்தி கூறினார்.

இரட்டை வாக்குரிமை என்றால் என்னவென்று புரிந்து கொள்ள வேண்டும். இரட்டை வாக்குரிமை என்று சொன்னால், இந்த மயிலாப்பூர் பகுதியிலே, ஒரு பொது



வேட்பாளர் நிற்பார். அந்த பொது வேட்பாளருக்கு அனைவரும் வாக்களிப்பார்கள். தாழ்த்தப்பட்டவர்களும் வாக்களிப்பார்கள். பிற்படுத்தப்பட்ட, உயர் சாதியினர் அனைவரும் வாக்களிப்பார்கள் ஆனால், தாழ்த்தப்பட்டவர்கள் மட்டும் போட்டியிட்டு, தாழ்த்தப்பட்டவர்கள் மட்டுமே வாக்களித்து, ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். அதுதான், இரட்டை வாக்குரிமை என்கிற பொருள். ஆக, இப்படி தாழ்த்தப்பட்ட மக்கள், தங்களுக்கான ஒரு பிரதிநிதியை, இந்த சட்டமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்று விரும்பியதை அவர் எதிர்த்தார்.

பட்டியலின சமூகத்தைச் சார்ந்தவர்கள் இப்போது எம்பிக்களாக இருக்கிறார்கள், எம்எல்ஏ-க்களாக இருக்கிறார்கள். இப்போது அமைச்சர்களாக இருக்கிறார்கள் ஆனால், அந்த அமைச்சர்கள், யாராவது பட்டியல் சமூக மக்களுடைய நலனுக்காக, ஏதாவது ஒரு செயலை செய்திருக்கிறார்களா என்று சொன்னால், ஒன்றும் செய்ய முடியாது. அனைத்து சமூகத்தினரின் ஆதரவு அவர்களுக்கு கட்டாயமாகிறது. ஆகவே தான் அம்பேத்கர் ஒரு தீர்த்த தரிசனமாக இரட்டை வாக்குரிமை வேண்டும் என்று கேட்டார். ஆங்கில அரசாங்கம் அதை ஏற்றுக் கொண்டது. ஆனால்,

- *காந்தியார் கொலை வரலாறு மறைக்கப் படுகிறது.*
- *காந்தியாரிடம் பெரியார் இயக்கத்துக்கு முரண் உண்டு. இரட்டை வாக்குரிமை ஓர் உதாரணம்.*
- *அம்பேத்கர் ஒன்றிய அரசுப் பதவிகளில் ஆதிராவிடர் இடஒதுக்கீட்டை 1943லேயே பெற்றுத் தந்தவர்*

காந்தியடிகள் சொன்னார், இந்துக்களுடைய ஒற்றுமை சீரழிந்துவிடும் என்று சொல்லி, எரவாடா சிறையிலே அவர் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தார். காந்தியடிகளுடைய சிறப்பே என்னவென்று கேட்டால், அவர் எத்தனையோ முறை சாகும் வரை உண்ணா விரதம் இருப்பார். ஒருமுறைகூட, சாக மாட்டார்.

சாகும் வரை பட்டினிப் போராட்டம் இருக்கிறவருக்கு சரியான சான்று எம் இனத்திலே, அந்த ஈழத்திலே வாழ்ந்த திலீபன் தான் சாகும் வரை உண்ணா விரதம் இருப்பதற்கு இலக்கணம் வகுத்தவன். ஒரு சொட்டு தண்ணீர் கூட விழுங்காமல், 13 நாட்கள் உண்ணா நோன்பு இருந்து உயிர் விட்ட இலக்கணம் தமிழனுக்குத் தான் உண்டு.

ஆனால், காந்தியடிகள் ஆட்டுப் பாலும், வேர்க்கடலையும் சாப்பிட்டு விட்டு உண்ணாவிரதம் இருப்பார். மற்றதை சாப்பிட மாட்டார். ஆட்டுப்பாலும், வேர்க்கடலையும் சாப்பிட்டுவிட்டு ஒரு வருடம் உண்ணாவிரதம் இருக்கலாம்.

இதே பகுதியைச் சேர்ந்த மயிலை சின்னத் தம்பி பிள்ளை எம்.சி.ராஜா என்று அழைக்கப் படுகிற, ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தினுடைய, மிகப் பெரிய தலைவர். அவர் காந்தியை ஆதரித்தார். அம்பேத்கரை இந்தப் பிரச்சினையில் எதிர்த்தார். அப்பொழுது தந்தை பெரியார் அவர்கள் வெளிநாட்டிலே சுற்றுப்பயணம் செய்து கொண்டிருக்கிறார்.

வெளிநாட்டிலே சுற்றுப்பயணம் செய்து கொண்டிருக்கிற போது, தன்னுடைய உதவியாளரை அழைத்து, அம்பேத்கருக்கு ஒரு தந்தி அனுப்புகிறார், அந்த தந்தியிலே சொல்கிறார், மரியாதைக்குரிய அம்பேத்கர் அவர்களே, நீங்கள் ஒரு காந்தியினுடைய உயிரைப் பார்க்காதீர்கள். இந்த கோடிக் கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களுக்கான உரிமையைப் பாருங்கள், ஒரு காந்தி போனால் இன்னொரு காந்தி வந்து விடுவார், ஆனால் கோடிக்கணக்கான மக்களின் உரிமை, நன்மை நமக்கு முக்கியமானது, அதனால் விட்டுக் கொடுத்து விடாதீர்கள் என்று தந்தி அனுப்பிய இந்தியாவிலேயே ஒரே தலைவர் பெரியார் தான்.

காந்தி மனைவி கஸ்தூரிபாய், அம்பேத்கரிடம் நேரில் வந்து சொன்னார், மரியாதைக்குரிய அம்பேத்கர் அவர்களே என்னுடைய கணவர் அங்கே உயிருக்கு போராடிக் கொண்டிருக்கிறார். நீங்கள் தான் அவருடைய உயிரைக் காப்பாற்ற வேண்டும். எனக்கு உயிர்ப்பிச்சை தாருங்கள். தாலி பிச்சை தாருங்கள் என்று கேட்கிறபோது தாழ்த்தப்பட்ட மக்களுடைய பாதுகாப்புக்காக புரட்சியாளர் அம்பேத்கர் இரட்டை வாக்குரிமையை அங்கே விட்டுக் கொடுக்க முன்வந்தார். அதைத் தொடர்ந்து தான் பூனா ஒப்பந்தம் உருவானது. இப்போதுள்ள இடஒதுக்கீடு முறை வந்தது.

இப்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த உரிமையைப் பறித்தவர் காந்தி, ஆனால், அந்த காந்தியை, இங்கு இருக்கக்கூடிய இந்துத்துவாவாதி கொலை செய்கிறார். எனக்கு முன்னாலே பேசிய தோழர் அன்பு தனசேகரன் சொன்னதைப் போன்று 1948 இல் அம்பேத்கர், அரசியல் நிர்ணய சபையிலே, உறுப்பினராக மாறுகிறார். தமிழ்நாட்டில் நீதிக்கட்சி ஆட்சியிலே இருக்கிறபோது இட ஒதுக்கீட்டு முறை வேலை வாய்ப்பிலும் கல்வியிலும் நடைமுறையிலே இருக்கிறது.

நீதிக்கட்சி ஆட்சி செய்த சென்னை மாகாணத்தில் 1927 முதல் வேலை வாய்ப்பில் ஆதி திராவிடர்களுக்கு (தலித் மக்களுக்கு) 8 சதவீத வேலை வாய்ப்பு இருந்தது. இதை இந்தியா முழுதும் விரிவாக்கி மத்திய அரசுப் பணிகளில் ஆதி திராவிடர்களுக்கு 8.3 சதவீத ஒதுக்கீடு கிடைக்க 1943இல் அன்றைய கவர்னர் ஜெனரலிடம் ஆணை பெற்றவர் அம்பேத்கர்.

அந்த சட்டத்தை கொண்டு வருகிற போது பார்ப்பனர்களெல்லாம் காந்தியைப் பார்த்து சொல்கிறார்கள், காந்தி அவர்களே தேசப்பிதா அவர்களே இங்கே இருக்கக்கூடிய அரசு வேலைகள் எல்லாம் நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தோம், இப்போது அம்பேத்கர் வந்து 8.3 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கி விட்டார். சாதாரண செருப்பு தைக்கும் தொழிலாளி எல்லாம் அரசியலுக்கு வந்து விடுவான்; சாக்கடை அள்ளும் தொழிலாளி எல்லாம் அரசியலுக்கு வந்து விடுவான், நாங்கள் வேலை இழக்க வேண்டிய அபாயம் வந்து விடுமே என்று சொல்கிற போது காந்திக்கு புத்தி வந்துவிட்டது, காந்தி சொன்னார் பார்ப்பனருடைய வேலை என்ன வேதம் ஓதுவதும் பயிற்றுவிப்பதும் தானே ஏன் பதவிக்கு ஆசைப்படுகிறீர்கள் என்று கேட்டார்.

காந்தி அவர்களே நீங்கள் பார்ப்பனர்களுக்கு ஆதரவாக இருக்கும் வரை பார்ப்பனர்கள் உங்களை மகாத்மா என்று அழைப்பார்கள். உங்களுக்கு சக்தி இருக்கிறது என்று சொல்லுவான் ஆனால் அவர்களுக்கு எதிராக ஒரு வார்த்தை பேசினால் உங்களை தீர்த்துக் கட்டி விடுவான் என்று பெரியார் எச்சரித்தார். பெரியார் சொன்னதைப் போன்றே காந்தியை கோட்சே என்ற பார்ப்பான் சுட்டுக் கொன்றான். சனாதன தர்மத்தை காப்பாற்றுவதற்காக காந்தியைக் கொன்றான் என்ற உண்மையை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். சனாதன தர்மத்தை யார் யார் எதிர்க்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் இந்த நாட்டில் துப்பாக்கிக் குண்டுகள் பரிசளிக்கப்படும் என்பதை வாடிக்கையாகக் கொண்டுள்ளது,

இது காந்திக்கு மட்டும் தானா? கோவிந்த் பன்சாரே என்ன செய்தார்? கல்புர்க்கி என்ன செய்தார்? அவர்களுக்கெல்லாம் துப்பாக்கி குண்டுகள் பரிசாக வழங்கப்பட்டதே! அவர்கள் செய்த குற்றம் என்ன? அவர்கள் செய்த குற்றம், இந்து சனாதன கருத்துக்களை எதிர்த்தனர்.

(தொடரும்)

– புரட்சிப் பெரியார் முழக்கம் 16.02.2023

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கருத்துரிமையைப் பறிக்கும் ஒன்றிய ஆட்சியின் அச்சுறுத்தல் சட்டம்

**எட்வின் பிரபாகரன்**

பாஜகவுக்கு எதிரான செய்திகள் பரவுவதைத் தடுப்பதற்காக, புதிய சட்டத்திருத்தம் (IT Act 2021 - 3[1][b][v]) ஒன்றை ஒன்றிய அரசு கொண்டு வர உள்ளது. பத்திரிக்கைத் தகவல் பணியகமோ (PIB), ஒன்றிய அரசால் அங்கீகரிக்கப்பட்ட வேறொரு நிறுவனமோ, ஒரு செய்தியை போலி செய்தி என்று அறிவித்து விட்டால், அந்தச் செய்தி எந்த ஒரு இணைய ஊடகத்திலிருந்தும் உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்பதே அந்த சட்டத்திருத்தம். இதனை மின்னணுவியல் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சகம் கொண்டு வரவுள்ளது. எந்த ஒரு ஒழுங்குமுறை அதிகாரமும் இல்லாத PIBயிடம், உண்மை சரிபார்ப்பு & கட்டுப்பாட்டு பொறுப்பை ஒன்றிய அரசு வழங்க விருக்கும் செயல், கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

அரசின் கொள்கைகள், திட்டங்கள், முன்னெடுப்புகள் & சாதனைகள் தொடர்பான செய்திகளை, அச்சு ஊடகங்களுக்கும் இணைய ஊடகங்களுக்கும் வழங்குவது தான், பத்திரிக்கைத் தகவல் பணியகத்தின் வேலையாக இருந்து வருகிறது. அரசின் குரலாக ஒலிக்கும் இப்பணியகத்தால், எப்படி ஒரு பக்கச் சார்பற்ற அமைப்பாகச் செயல்பட முடியும்? என்ற கேள்வி எழுகிறது. ஏற்கனவே பிபிசி ஆவணப்படத்தை எவ்வாறு முறையற்ற வகையில் ஒன்றிய அரசு தடை செய்தது என்பதை நாம் பார்த்தோம். இந்த சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டால், அது ஊடகத் துறையில் சங் பரிவாரங்களின் ஏகபோகத்தில் தான் போய் முடியும்.

ஏற்கனவே “சர்வதேச உண்மை சரிபார்ப்பு வலைப்பின்னல்” உள்ளிட்ட உண்மை சரிபார்ப்பு மாதிரிகள் இயங்கி வரும் நிலையில், அரசின் ஊதுகுழலாக விளங்கும் PIBயின் கட்டுப்பாட்டில், ஊடகங்களை கொண்டு வர முயற்சிப்பது உள்நோக்கம் கொண்டதாகும். இது குறித்து மக்களின் கருத்தும் கேட்கப்படும் என்று, கடந்த வெள்ளியன்று நாடாளுமன்றத்தில் அமைச்சர் ராஜிவ் சந்திரசேகர் தெரிவித்துள்ளார். இந்திய பத்திரிக்கை ஆசிரியர்கள் சங்கம், இந்திய செய்தித் தாள் சமூகம், செய்தி ஒளிபரப்பாளர்கள் & எண்ம (digital) சங்கம் ஆகிய சங்கங்களின் கடும் எதிர்ப்பினால், இச்சட்டத்தினை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான காலக் கெடுவை அமைச்சகம் நீட்டித்துள்ளது.

PIB தவிர்த்து இன்னும் சில நிறுவனங்களுக்கும் ஒன்றிய அரசு உண்மை சரிபார்ப்பு அனுமதியை வழங்கவுள்ளது. சனாதனக் கொள்கையுடையவர்கள் நடத்தும் நிறுவனங்களை பாஜக தேர்ந்தெடுக்க வாய்ப்புகள் அதிகம். இந்நிறுவனங்கள் நியாயமாக நடந்து கொள்ளும் என்று எப்படி நம்புவது? இது பற்றி AltNews உண்மை-சரிபார்ப்பு இணைய தளத்தின் நிறுவனர் Pratik Sinha கூறும் போது, “பாஜகவுக்கு எதிரான செய்திகள் ஏதேனும் வந்தால் அதன் உண்மைத் தன்மையை வேகவேகமாகச் சரி பார்க்கும் PIB, வேறு பல வதந்திகளைச் சரி பார்க்கக் கடந்த காலங்களில் தவறியுள்ளதை” சுட்டிக் காட்டி உள்ளார்.

அரசின் இந்த புதிய தணிக்கை நடவடிக்கை, இந்திரா காந்தியின் நெருக்கடி நிலை காலத்தை நினைவூட்டுவதாகத் தெரிவித்துள்ள இந்திய பத்திரிகையாளர் மன்றம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுகுறித்து கேள்வி எழுப்பவும் கோரிக்கை விடுத்துள்ளது. அரசு “பெரியண்ணன் மனோபாவத்தோடு” நடந்து கொள்வதாக காங்கிரஸ் ஊடகப் பிரிவின் தலைவர் பவன்கேரா குற்றம் சாட்டியுள்ளார். 2019ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட PIB உண்மை-சரிபார்ப்புக் குழு, என்ன அழகில் உண்மையைச் சரிபார்த்தது என்பதற்கு பல உதாரணங்களைக் கூற முடியும்.

1. 2020ஆம் ஆண்டில், புலனாய்வுப் பணியகத்தின் ஆள்சேர்ப்பு அறிவிப்பை, போலியானது என்று PIB தவறாக அறிவித்தது
2. அதே ஆண்டு ஜூன் மாதம், PIB Fact Check குழு ஒரு tweet (கீச்சு) செய்தது. அதில், “59 சீன செயலிகளை (Apps) சிறப்பு பணிக் குழு (STF) பயன்படுத்துவதில்லை என்று வதந்தி பரப்பப்பட்டுள்ளது. இந்தச் செய்தி தவறானது” என்று PIB கூறியது. இது தவறு என பின்பு தெரிய வந்த போதிலும், அந்த கீச்சை இன்று வரை PIB நீக்கவில்லை.
3. கொரோனா காலத்தில் ஷ்ரமிக் தொடர் வண்டிகளில் (புலம் பெயர்ந்தோர் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்ற தொடரிகள்) ஏற்பட்ட இறப்புகள் தொடர்பான செய்திகள் வந்த போதும், PIB உண்மை சரிபார்ப்புக் குழு எந்த விதமான உண்மைகளையும் வழங்காமல், இந்தச் செய்திகளைப் போலி என்று கூறியதோடு மட்டுமல்லாமல், தொடரித் துறையின் மறுப்பையும் பகிர்ந்தது. AltNews போன்ற உண்மை-சரிபார்ப்பு இணைய தளங்கள், PIBயின் தவற்றை அம்பலப்படுத்தின.
4. மோடி நிர்வாகம் முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு முன், இந்திய மருத்துவ ஆராய்ச்சிச் சபையால் (ICMR) அமைக்கப்பட்ட, கோவிட் பணிக் குழுவுடன் கலந்தாலோசிக்கவில்லை என்று 2020 ஏப்ரலில் Caravan இதழ் கட்டுரை தீட்டியது. PIB இதற்கு எதிர் வினையாற்றியது. ஆதாரங்களை வழங்கக் கேட்ட போது, PIB தரப்பிலிருந்து ஒரு சிறிய காகிதம் கூட வழங்கப் படவில்லை.
5. குஜராத் அரசு மருத்துவமனையில், செயற்கை சுவாசக் கருவிகள் தரமற்றவையாக இருப்பதைப் பற்றி, ஆதாரப் பூர்வமாக The Wire இணைய தளம் வெளியிட்ட கட்டுரையை PIB மறுத்தது.
6. சீன ராணுவம் இந்திய எல்லைக்குள் ஊடுருவியதை ஊடகங்கள் புகைப் படங்களோடு வெளிப்படுத்திய போதும், PIB அதனை வெட்கமே இல்லாமல் மறுத்து, பின் மூக்குடைபட்டது.

இவ்வாறாக ஒரு செய்தியால் அரசுக்கு பிரச்சனை எழும் பொழுது, அரசைப் பாதுகாக்கும் கேடயமாகக் களத்தில் இறங்கி, ஒருதலைப்பட்சமாகச் செயல்படும் ஒரு நிறுவனத்தின் கட்டுப்பாட்டில், அனைத்து இணைய ஊடகங்களையும் கொண்டு வந்து அச்சுறுத்துவதற்காகவே, பாஜக இந்த சட்டத் திருத்தத்தை தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் மூலமாகக் கொண்டு வருகின்றது. Facebook, Twitter போன்ற சமூக வலைத்தளங்களில், அரசின் மீது வைக்கப்படும் அத்தனை விமர்சனங்களையும், முழுவதுமாக முடக்குவதற்கான ஒரு தொடக்கப் புள்ளியாக இந்த சட்டத்திருத்தம் (IT Act 2021 - 3[1][b][v]) அமைய உள்ளது. எனவே இதனை ஆரம்பக் கட்டத்திலேயே தடுத்து நிறுத்துவது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.300**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 8973341377

## சேத்துப்பட்டு இராஜேந்திரன்–அலமேலு மணிவிழா

பெரியாரியலாளர் சேத்துப்பட்டு க. இராஜேந்திரன் - அலமேலு மணிவிழா பிப்.22ஆம் தேதி அயனாவரம் ‘ஸ்ரீசக்தி பார்ட்டி ஹாலில்’ ஆனூர் ஜெகதீசன் (தலைவர் த.பெ.தி.க.) தலைமையில் நிகழவிருக்கிறது. தமிழ்நாடு ஆதி திராவிடர் பழங்குடி ஆணைய துணைத் தலைவர் புனித பாண்டியன், உறுப்பினர் வழக்கறிஞர் குமாரதேவன், அன்பு தனசேகர் (தி.வி.க.) சிறப்புரையாற்றுகிறார்கள்.

மணிவிழா மகிழ்வாக ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வளர்ச்சி நிதிக்கு ரூ.2000/- வழங்கியுள்ளார்கள்.

## பராசக்தி திரைப்படத்தில் சமூக நீதிக் கருத்துகள்: கொளத்தூர் மணி உரை

ஊடகம் மற்றும் சமூக அறிவியல் மையம், மூங்கில்பாடி,சேலம் மற்றும் சேலம் ஏ.வி.எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் விஷுவல் கம்யூனிகேஷன் துறை நடத்திய தேசிய அளவிலான இரண்டு நாள் மாநாடு நடந்தது.

“திரைப் படங்களில் திராவிடக் கதையாடல்கள்”: “பராசக்தி திரைப்படம்” - ‘வாசிப்பு மற்றும் மீள் வாசிப்பு’ எனும் தலைப்பில் நடைபெற்ற 2 நாள் மாநாட்டில் 10.02.2023 வெள்ளி காலை 10.00 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்று “பராசக்தி திரைப்படத்தில் சமூக நீதிக் கருத்துகள்” எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

**ஜாதி மத மறுப்புத் திருமணம் செய்து கொள்ள விருப்பமா?**

- மணமுறிவு பெற்றவர்கள்
- துணையை இழந்தவர்கள்
- மாற்றுத் திறனாளிகள்

– ஆகியோரும் Manitham Matrimony இணையதளத்தில் இலவசமாகப் பதிவு செய்து பயன் பெறலாம்.

இச்சேவையை Google Play
அலைப்பேசி செயலியாகவும் (Mobile App)
பதிவிறக்கம் செய்து பயன் பெறலாம்.

**மனிதம் திருமண தகவல் நிலையம்**
எண்.5/9, பாலமுத்துகிருஷ்ணா தெரு
தர்மாபுரம், தியாகராய நகர், சென்னை - 600 017.
அலைபேசி எண்.7604977781
மின்னஞ்சல் : manithammatrimonial@gmail.com
web: http//manithammatrimony.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 17th February 2023

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN